PR/2018/20/T


# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-38313, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk


ஜுலை 06, 2018

## ஊடக அறிக்கை

**பேராசிரியர் கார்லோ பொன்சேகாவிற்கு புகழ்மிக்கதோர் கௌரவம் வழங்கிய ஜப்பானிய அரசாங்கம்**

“உதய சூரியன் இ பொற்கதிர்களுடன் கூடிய கழுத்துப் பட்டி” கொண்ட தன்னுடைய அதியுயர் கௌரவத்தை பேராசிரியர் கார்லோ பொன்சேகாவிற்கு ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.
ஜப்பானியக் கலாசாரத்தை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியமைக்காகவே பேராசிரியர் கார்லோ பொன்சேகாவிற்கு ஜப்பானிய சக்கரவர்த்தியின் சார்பாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அதிமேதகு கெனிச்சி சுகனுமா வழங்கி கௌரவித்தார். இந்த விருது வழங்கல் நிகழ்ச்சி கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் ஜுலை 6ம் திகதி நடைபெற்றது.

இலங்கையிலுள்ள மிகச் சிறந்த மருத்துவர்களில் ஒருவரான பேராசிரியர் கார்லோ பொன்சேகாஇ 2010ம் ஆண்டில் ஜப்பானிய இலங்கை சிநேகபூர்வ கலாசார நிதிய விருதுகள் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தக் குழுவிற்கான அவரது தலைமைத்துவம் மற்றும் பங்களிப்பு காரணமாக புதியதும் மாற்றமுறுவதுமான கலாசார சூழ்நிலைக்கு மத்தியிலும்இ இலங்கையிலுள்ள மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்த கலாசார விருதுகள் என்ற நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்கும் அதனைத் தொடர்ந்து பேணிச்செல்வதற்கும் கலாசார நிதிய விருதுகளால் முடியுமாக இருந்தது.

1993ல் ஸ்தாபிக்கப்பட்ட ஜப்பானிய இலங்கை சிநேகபூர்வ கலாசார நிதிய விருதுகள் (புன்கா விருது) இலங்கையிலுள்ள மிகவும் புகழ்மிக்க விருதுகளிலொன்றாக திகழ்கின்றது. இது அதீத ஆற்றல்மிக்க தமது தொழில்சார் வாழ்வின் நடுப்பகுதியிலுள்ள இலங்கை கலைஞர்களை ஊக்குவித்துஇ பிரபல்யப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. வருடந்தோறும் கலாசார நிதியத்தால் புன்கா விருது வழங்கப்படுவதுடன் இ இவ்விருது பல

கலைஞர்கள் தமது ஆற்றல்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவியுள்ளது. ஜப்பானிய இலங்கை சிநேகபூர்வ கலாசார நிதிய விருதுகளின் வளர்ச்சிக்காக பேராசிரியர் கார்லோ பொன்சேகாவின் நீடித்த காலம் நின்று நிலைக்கின்ற அர்ப்பணிப்பு உயர்வாக பாராட்டப்படுகின்றது.

பேராசிரியர் பொன்சேகாவிற்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டமையானதுஇ ஜப்பானிய அரசாங்கத்தினதும் மக்களதும் உயர்வான கௌரவத்திற்கும் , உறுதியான நட்புறவிற்கும் சான்றுபகர்கின்றது.

*********************************************************

மேலதீக விபரங்களுக்காக கலாசார பகுதியை தயதுசெய்து தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-2693831-3 (ext.227)